**திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்**

**முன்னிலை: டாக்டர்.த.பிரபுசங்கர், இ.ஆ.ப.,**

COLR/52906/2023 /அ4 நாள்.22.08.2024

பொருள்: பொதுப்பணி – தமிழ்நாடு அமைச்சுப்பணி – திருவள்ளூர் மாவட்ட வருவாய் அலகு – கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராக பணிநியமனம் செய்யப்பட்ட – ஜெயமாலா (செல்வி) க – என்பவரின் பணியினை வரன்முறை செய்து – உத்தரவிடப்படுகிறது.

படிக்க:
1. திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.COLR/31384/2022/அ1, நாள்: 30.07.2023
2. திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின் செயல்முறைகள் COLREV–COLR/52906/2023–A4 நாள்:10.08.2023
3. அரசாணை (நிலை) எண்.33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (க்யூ–1) துறை, நாள். 08.03.2023.
4. மனித வள மேலாண்மைத் (ஜி2) துறையின் கடித ந.க. எண். 5532/ஜி2/2023–1, நாள். 20.09.2023

*****

உத்தரவு:–

திருவள்ளூர் மாவட்ட வருவாய் அலகு, திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், ஊத்துக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் முதுநிலை வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து பணியிடையே 25.10.2022 அன்று காலஞ்சென்ற கருப்பசாமி த/பெ பழனி என்பவரின் மகள் செல்வி.க.ஜெயமாலா என்பவருக்கு பார்வை 1–ல் காணும் திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகளின்படி கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராக பணி நியமனம் செய்து உத்தரவிடப்பட்டது. பார்வை 2–ல் காணும் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), திருவள்ளூர் அவர்களின் செயல்முறைகளின்படி தனியருக்கு இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணியிடம் வழங்கி உத்தரவிடப்பட்டதைத் தொடர்ந்து, தனியர் இம்மாவட்ட வருவாய் அலகில் இளநிலை வருவாய் ஆய்வாளராக 10.08.2023 அன்று முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார்.

பார்வை 3–ல் காணும் அரசாணையில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டவர்களுக்கு பணி வரன்முறை செய்யப்படுவது குறித்து கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வரையறுக்கப்பட்டுள்ளது.

<u>விதி 16–ல்</u>

"Each appointing authority shall regularize the services of the person appointed under these rules within a period of one year from the date of his joining service, subject to eligibility"

பார்வை 4–ல் காணும் அரசுக் கடிதத்தில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டவர்களுக்கு கீழ்குறிப்பிடப்பட்டுள்ளவாறு விதித் தளர்வு இல்லாத இனங்களில் உள்ள நபர்களுக்கு நியமன அலுவலரே பணி வரன்முறை செய்யலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

"In view of the above rule position, hereinafter relaxation of Tamil Nadu Government Servants (Conditions of Services) Act, 2016 / Tamil Nadu Civil Services (Appointment on Compassionate Grounds) Rules, 2023 shall not be necessitated in respect of minimum age, married daughter, unmarried brother / sister of the unmarried deceased Government servant, to be appointed / appointed prior to commencement of the said Tamil Nadu Civil Services (Appointment on Compassionate Grounds) Rules, 2023.

However, relaxation shall arise to Tamil Nadu Civil Services (Appointment on Compassionate Grounds) Rules, 2023 for application submitted beyond three years, Maximum Age, Alternate application alone"

மேற்குறிப்பிடப்பட்ட விதிகளின்படி இம்மாவட்ட வருவாய் அலகில் கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராக பணி நியமனம் செய்யப்பட்ட தனியருக்கு நியமன அலுவலரே பணி வரன்முறை செய்ய தகுதியுடையவராகிறார்.

எனவே, இம்மாவட்ட வருவாய் அலகில் கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வரும் செல்வி.க.ஜெயமாலா என்பவர் பணியில் சேர்ந்த நாளான 10.08.2023 முற்பகல் முதல் பணி வரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

ஒம்/–த.பிரபுசங்கர்,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
திருவள்ளூர்.

//உத்தரவின்படி//

அலுவலக மேலாளர் (பொது)

பெறுநர் :

செல்வி.க.ஜெயமாலா,
இளநிலை வருவாய் ஆய்வாளர்,
(எக்ஸ் பிரிவு),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திருவள்ளூர்.

நகல் : தலைமை உதவியாளர் (ட்டி – பிரிவு),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருவள்ளூர்.
(சம்மந்தப்பட்ட நபரின் பணிப்பதிவேட்டில் தக்க பதிவுகளை மேற்கொள்ள வேண்டியது).